பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி

மலர்: 15] சென்னை: சித்திரை 24 (6—5—68) திங்கள் ★ வெளியூர்: சித்திரை 25 (7—5—68) செவ்வாய் [இதழ்: 269

மருத்துவ முறைகளில் மாறுதல் அவசியம்!

சென்னை, மே 5—

"ஆயுர்வேதம் முதலிய இந்திய மருத்துவ முறைகள் நவீனகால மாறுதலுக்கேற்ப வளர்ச்சி காணவேண்டியது அவசியமாகும்.

"நவீனகால மாறுபட்ட நிலைமைகளுக்கேற்ப, இந்திய மருத்துவ முறைகள் வளர்ச்சி காணாவிடில், அவை நசிந்துவிடக் கூடிய அபாயம் ஏற்படலாம்.

"இந்திய மருத்துவ முறைகளில் கையாளப்படும் மருத்துகளின் தரத்துக்குப் பாதகமேற்படாதவகையில் அவற்றின் தயாரிப்பு முறைகளில் சீர்திருத்தம் செய்வது அவசியமாகும்."

—உணவுத் துறை அமைச்சர்
கே. ஏ. மதியழகன்

ஜப்பான் தலைநகரில் அண்ணா

வெளிநாட்டு அமைச்சரைச் சந்திக்கிறார்

தொழிற்சாலைகள்--கலாச்சாரச் சிறப்புமிக்க இடங்களைப் பார்ப்பார்

தொழிலதிபர்களைச் சந்தித்துப் பேச ஏற்பாடு

டோக்கியோ, மே 5—

தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் இன்று இரவு அமெரிக்காவிலிருந்து ஜப்பான் தலைநகரான டோக்கியோ வந்துசேர்ந்தார்.

விமான நிலையத்தில் அவரை ஜப்பானிய அயல்நாட்டுத்துறை அதிகாரிகளும், இந்தியத் தூதரக அதிகாரிகளும் வரவேற்றனர்.

ஜப்பான் வெளிநாட்டு அமைச்சின் அழைப்பினை ஏற்று வந்துள்ள அறிஞர் அண்ணா அவர்கள் இங்கு 5 நாட்கள் தங்கியிருந்து பல இடங்களைச் சுற்றிப் பார்ப்பார்கள்.

பல தொழிற்சாலைகளையும், பல கலாச்சாரச் சிறப்பு வாய்ந்த இடங்களையும் பார்வையிடவிருக்கும் அண்ணா அவர்கள், ஜப்பானின் முக்கியத் தொழிலதிபர்களையும் சந்தித்துப் பேச ஏற்பாடாகியிருக்கிறது.

மே 7-ம் நாள் (செவ்வாய்க்கிழமை) வெளிநாட்டு அமைச்சர் திரு. டாகோ மிகியை, அண்ணா அவர்கள் சந்திப்பார்.

சேலம் திட்டம்-அண்ணாஉறுதி

சேலம் உருக்காலைத் திட்டம் பற்றி அண்ணா அவர்கள் திட்டவட்டமாகக் கூறியதாவது:—

"சேலம் உருக்காலைத் திட்டத்திற்கு ஒத்துழைப்புத் தர இசைந்துள்ள ஜப்பானிய நிறுவனங்களையும், மற்றும் பல நிறுவனங்களையும் சந்திக்கப்போகிறேன்.

சேலம் உருக்காலைக்கு வடிவமைப்பு, சில ஆண்டுகளுக்கு முன்பே தயாரிக்கப்பட்டது; எந்த நேரத்திலும் அதனைத் துவக்க இயலும்.

இந்தியாவின் நான்காவது திட்டத்தில் சேலம் உருக்காலைத் திட்டம் சேர்க்கப்பட்டாலும் சேர்க்கப்படாவிட்டாலும் அதை நிறைவேற்றத் தமிழக அரசு உறுதியுடனேயே இருக்கிறது; மாநில மட்டத்தில் மேற்கொள்ள நாங்கள் தயாராகவே இருக்கிறோம்.

'எப்படியும் சேலம் உருக்காலைத் திட்டம் மேற்கொள்ளப்படும்" என்றே நான் ஜப்பானிய நிறுவனங்களிடம் தெரிவிக்கப்போகிறேன்; ஆனால், மாநில மட்டத்தில் நிறைவேற்றும் திட்டம் பற்றி விவாதிக்கமாட்டேன்; ஏதெனில், 'நான்காவது திட்டத்தில் அது சேர்க்கப்படும்' என இன்னமும் நான் நம்பிக்கை கொண்டிருக்கிறேன்.

திட்டத்திற்குத் தேவையான அந்நியச் செலாவணிப் பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய சில யோசனைகள், ஜப்பானிய நிறுவனங்களிடமிருந்து எனக்குக் கிடைத்திருக்கின்றன."

கண்டதும் கேட்டதும் பெரிதும் கவர்ந்தது!

16 நாள் அமெரிக்கப் பயணம் பற்றி அவர் கருத்தறிவித்ததாவது:—

"அங்கு நான் கண்டவைகளும் கேட்டவைகளும் என்னைப் பெரிதும் கவர்ந்துவிட்டன. நான் சென்ற இடங்களிலெல்லாம் மாணவர்களையும், பேராசிரியர்களையும் சந்தித்தேன்; இந்தியாவின் பிரச்சினைகளில் — குறிப்பாகத் திட்டமிடுவதிலும், மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளிலும் அவர்கள் தீவிர அக்கறை காட்டினர்.

குழுக்களை உருவாக்கும் திட்டக் குழு

புதுடில்லி, மே 6—

நான்காவது ஐந்தாண்டுத் திட்ட தொடக்க வேலை சம்பந்தமாக இதுவரையில் 49 குழுக்களும், துணைக் குழுக்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

திட்டக் குழு ஒவ்வொரு துறைக்குமாக 14 திட்டக் குழுக்களை அமைத்திருக்கிறது. இக்குழுக்களின் தலைவர்களாக அந்தத் துறையைச் சார்ந்த மத்திய அமைச்சர்கள் அல்லது தலைமைச் செயலகச் செயலாளர்கள் இருப்பார்கள்.

இதைத் தவிர, திட்டக் குழுத் துணைத் தலைவரின் தலைமையில் பிற்படுத்தப்பட்ட மக்களின் நலனுக்காகக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது.

மத்திய அமைச்சகத் துறைகளைச் சேர்ந்த 12 பணியாளர் குழுக்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் திட்ட வாய்ப்புகள் பற்றிய பணியாளர் குழுக்களுக்கு 9 துணைக் குழுக்கள் அமைக்கப்பட்டிருப்பதாகவும் அறியப்படுகிறது.

வியட்காங்குகள் திடீர்த் தாக்குதல்

இளம் அணியினர் நிர்மூலம்

இராணுவத் தளங்கள் இலக்கு

சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதற்கான சூழ்நிலை உருவாகியுள்ள நேரத்தில், செய்கோனிலும், அதன் சுற்றுப் புறத்தில் மட்டுமன்றி தென் வியட்நாம் முழுவதிலும் வியட்நாம் படைகள் தாக்குதல் நடத்தியிருக்கின்றன.

6-மாநிலத் தளங்களிலும், பல அமெரிக்க இராணுவத் தளங்களிலும் தாக்குதல் நடைபெற்றிருக்கிறது.

"தென் வியட்நாமின் எதிர்காலத்தை நிர்ணயிப்பதில் வியட்காங்கைப் புறக்கணிக்க முடியாது" என்பதைத் தெளிவுபடுத்துவதற்காகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கருதப்படுகிறது.

சுமார் 120 நகரங்களையும், இராணுவ நிறுவனங்களையும் வியட்காங் படைகள் தாக்கியிருக்கின்றன.

ஓர் அமெரிக்க இளம்படையினர் அணி நிர்மூலமாக்கப்பட்டுவிட்டது.

சான்பிரான்சிஸ்கோவில் அண்ணா

இயற்கைக் காட்சிகளைக் கண்டு களித்தார்

சான்பிரான்சிஸ்கோ, மே 5 —

தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள் ஹானலூலுவுக்குச் செல்வதற்கு முன், இங்குள்ள இயற்கைக் காட்சிகளைக் காண்பதற்கு ஒரு நாள் முழுவதும் செலவிட்டார்.

இந்நகரத்தை அவர் சுற்றிப் பார்த்துவிட்டு இங்குள்ள இந்தியத் தூதர் திரு. கே எஸ். பாப்ஜி அவர்கள் அளித்த விருந்தில் கலந்து கொண்டார்.

அத்துடன், சான்பிரான்சிஸ்கோவிலுள்ள இந்திய மாணவர்களையும் அவர் சந்தித்தார்.

பெர்க்கிலியில் கலிபோர்னியா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர்களுடன் விருந்துண்டார்.

லாஸ் ஏஞ்சல்சிலிருந்து அண்ணா அவர்கள் வியாழனன்று இங்கு வந்து சேர்ந்தார். அங்கு அவர் இந்திய மாணவர்களைச் சந்தித்ததுடன், பசிபிக்கிலுள்ள டிஸ்னிலாந்து, மரீன்லாந்து ஆகிய இரண்டு இடங்களையும் அண்ணா பார்வையிட்டார்.

70 ஏக்கர் பரப்பளவுள்ள பூங்காவை அவர் இரயிலிலேயே சுற்றிப்பார்த்தார். அமெரிக்க மக்களின் சீரிய வாழ்க்கைத் தரத்தைக் காட்டும் காட்சியைப் பார்த்துக் கொண்டே அறிஞர் அண்ணா அவர்கள் இரயிலில் பயணம் செய்தார்.

சில இடங்களில் பனிமேகங்கள் மறைத்ததால் நன்றாக அவரால் பார்க்க முடியவில்லை.

பல்வேறு நாட்டின் கலாச்சரம்—பண்பாடு—நடனங்கள் ஆகியவை பற்றிய காட்சிகள் அடங்கிய சிறு உலகினை, படகில் பயணம் செய்து கண்டுகளித்தார்.

வியாழன் இரவு லாஸ் ஏஞ்சல்ஸ் நகரை விட்டு அவர் புறப்படுகையில், அவரை வழியனுப்பி வைக்க ஏராளமான இந்திய மாணவர்கள் விமான நிலையத்திற்கு வந்திருந்தனர்.

சான்பிரான்ஸிஸ்கோ, லாஸ் ஏஞ்சல்ஸ் விமான நிலையங்களில் அறிஞர் அண்ணா அவர்களின் வருகையும் புறப்பாடும் பெரும்பான்மையாக இந்திய மாணவர்களைக் கவர்ந்தது.

விஞ்ஞான சேர்ஷலிசக் கொள்கைகளை உலகுக்குத் தந்த கார்ல் மார்க்சின் 150-வது பிறந்த நாளையொட்டி—அவரைச் சிறப்பிக்கும் வகையில்—சோவியத் அரசு, சிறப்பு அஞ்சல் தலைகளை வெளியிட்டிருக்கிறது.

'அறிவகத்'தில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை, மே 6—

இன்றுகாலை 10-30 மணியளவில் கல்வி—தொழிலமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், தி. மு. க. தலைமை நிலையமான 'அறிவக'த்திற்கு வந்தார்.

திருமணம் ஒன்றிற்குச் சென்றுவிட்டுத் திரும்பும் வழியில், 'அறிவகத்'திற்கு யாரும் எதிர்பாராத வகையில் வந்து இறங்கிய அமைச்சரை 'அறிவக'த் தோழர்களும், 'நம் நாடு' அலுவலகத் தோழகளும் வரவேற்றனர்.

திரு. நெடுஞ்செழியன் அவர்கள், 'கழக அவைத் தலைவர்' என்ற முறையில், கழகத் தேர்தல்கள் பற்றிய விவரங்களைக் கேட்டறிந்தார்.

தலைமைக் கழகப் பணிகள் பற்றியும் கேட்டறிந்து சில ஆய்வுரைகள் வழங்கினார்.

'நம் நாடு' இதழ் பற்றியும், அதன் அலுவலகப் பணிகள் குறித்தும் விசாரித்தார்.

'நம் நாடு' இதழைப் பெரிய அளவில் வெளியிட ஏற்பாடு செய்வது பற்றியும் சில தகவல்களைக் கேட்டறிந்தார்.

அமைச்சர் அவர்கள் எல்லோருடனும் சிறிதுநேரம் அளவளாவி விட்டு விடைபெற்றுச் சென்றார்.

மதுவிலக்கை ஒழிக்கக் காங்கிரசாரே கங்கணம்!

கட்சிக்காரர்களைத் திருப்திப்படுத்த அமைச்சரும் ஆயத்தம்

ஆந்திரத்தில் அடுத்த மாதம் மதுக்கடைகள் திறக்கப்படும்?

விசாகப்பட்டினம், மே 6—

மதுவிலக்குக் கொள்கைபற்றி ஆந்திர அரசு, அடுத்த திங்களில் முடிவு செய்யக்கூடுமாம்!

ஆந்திராவில்—மதுவிலக்குப் பகுதியில், 'மதுவிலக்கை ரத்து செய்யவேண்டும்' எனக் கேட்டுக்கொண்டு ஏறத்தாழ 140 சட்டமன்ற உறுப்பினர்கள், 'கோரிக்கை மனு' அளித்துள்ளனராம்!

தெலிங்கானா மாவட்டத்தைச் சேர்ந்த ஒன்பது பகுதியிலும் மதுவிலக்கு அமுலில் இல்லை!

ஸ்ரீகாகுளம் மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்துவிட்டு இங்கு திரும்பிய மதுவிலக்குத்துறை அமைச்சர் வி. சத்திய நாராயணராவ், இத்த வல்களைத் தெரிவித்துவிட்டு மேலும் சுட்டிக்காட்டியிருப்பதாவது:—

"நான் சென்ற இடங்களிலெல்லாம் காங்கிரசுக்காரர்களே, மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டுமென என்னிடம் கேட்டுக்கொண்டனர்.

"மாநிலத்தின் ஒரு பகுதியில் மதுவிலக்கு இல்லை; மற்றொரு பகுதியில் அமுலில் இருக்கிறது; இந்த நிலைமை, நிரந்தரமாக நீடித்துக்கொண்டிருக்க முடியாது; எனவே, சூன் திங்களுக்குள் அரசு, இதுபற்றி ஒரு முடிவுக்கு வர வேண்டியிருக்கிறது."

சனநாயகத்திற்கு ஒரு சோதனை!

புதுடில்லி, மே 6—

"உணவு, வேலையின்மை ஆகிய இரு பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு முதலிடம் தராவிட்டால் இந்தியாவின் சனநாயகம் சங்கடத்திற்குள்ளாகிவிடக்கூடும்!

"உணவுதான் மனிதனின் உயிர்நாடிப் பிரச்சினையாகும்; அரசியல் தலைவர்களோ, நிர்வாகிகளோ இதில் கவனம் செலுத்தாமல், நமக்குத் தொடர்பில்லாத பிரச்சினைகளைப் பற்றிப் பிரமாதமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்!

"மக்களின் வறுமைப் பிணியை ஒழிக்கும் துறையில் அனைத்துக் கட்சியினரும் ஒன்று சேர வேண்டும்."

--வி. வி. கிரி
(துணைக் குடியரசுத் தலைவர்)

உணவு உற்பத்தியை மேலும் பெருக்க தமிழக அரசு திட்டம்!

9 இலட்சம் ஏக்கர் நிலம் இரு போக சாகுபடி நிலங்களாக மாறும்

திட்ட விவரம்--அமைச்சர் மதியழகன் விளக்கம்

மதுரை, மே 6—

தமிழ்நாட்டில் உணவு உற்பத்தியை மேலும் பெருக்குவதற்குத் தமிழக அரசு திட்டமிட்டிருக்கிறது.

கடந்த ஆண்டில் மூன்று இலட்சம் ஏக்கர் நிலம், இரு போக நெல் சாகுபடி நிலமாக மாற்றப்பட்டது; இந்த ஆண்டில் 9 இலட்சம் ஏக்கர் நிலம் இரு போக சாகுபடி நிலமாக மாற்றப்படும்.

உணவு உற்பத்தியை மேலும் பெருக்குவது பற்றி ஆலோசனை கூற, குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இது, வருவாய்த் துறை வாரியத்தின் உறுப்பினரான இராயப்பா தலைமையில் செயல் படுகிறது; இக்குழு, தனது 15 அம்சத் திட்டங்களைத் தயாரித்துத் தமிழக அரசிடம் அளித்திருக்கிறது; திட்ட விவரங்களை, உணவுத் துறை அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள் தெரிவித்துள்ளார்; திட்ட விவரங்கள் வருமாறு:—

1. கடந்த ஆண்டு 3 இலட்சம் ஏக்கர் நிலம் இரு போக நெல் சாகுபடி நிலமாக மாற்றப்பட்டது; இந்த ஆண்டு அதனை 9 இலட்சம் ஏக்கர் நிலத்திற்குப் பரப்ப வேண்டும்.

2. பெரும் பலனைத் தரும் 'ஏ. டி. டி. 27' என்ற ரகமும், 'சி.சோ. 28', 'எக்ஸ். டி. 5' என்ற உயர்ந்த ரக நெல் விதைகளும் 28 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்படும்.

3. இந்த விதைகளை வாங்கத் தனியாகப் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது; இதற்கான ஏற்பாடுகளை விவசாய இலாகா இயக்குநர் செய்துவருகிறார்.

4. தஞ்சை மாவட்டத்தில் வடிமுனைக் குழாய்க் கிணறுகளுக்கு 2,300 பம்பு செட்டுகள் பொருத்தப்படும்; இதற்கான மின் உதவிக்கு மின் வாரியத்தின் மூலம் ரூ. 17 இலட்சம் கடன் கொடுக்கப்படும். அடுத்த சூன் மாதத்திற்குள் இவை பொருத்தப்பட்டுவிடும்.

5. இரசாயன உரம் எல்லா விவசாயிகளுக்கும் தாராளமாகக் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்.

6. பருப்புப் போன்ற தானிய வகைகளின் பற்றாக்குறையைப் போக்க புன்செய்த் தானிய உற்பத்தியில் தனிக் கவனம் செலுத்தப்படும். 500 டன் துவரை விதை வடநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும். புன்செய்த் தானியப் பயிர்களுக்கு இருமுறை தண்ணீர் பாய்ச்ச ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

7. சென்னை மற்றும் சுற்று வட்டாரங்களில் ஆயிரம் ஏக்கரில் அரசே காய்கறிகள் பயிரிடுகிறது. ரூ. 25-இலட்சம் மதிப்புள்ள ஐந்நூறு டன் காய்கறிகள் இதன் மூலம் உற்பத்தி செய்யப்படும். இதற்கு முன்னோடியாக 10-ந் தேதி செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள அரசினர் எஸ்டேட்டில் நூறு ஏக்கர் நிலத்தில் காய்கறி உற்பத்தி செய்யப்படவிருக்கிறது அன்று நடைபெறும் விழாவில் அமைச்சர் கே. ஏ. மதியழகனும், அமைச்சர் ஏ. கோவிந்தசாமியும் கலந்துகொள்வார்கள்.

8. பசுந்தாள் உரம் உற்பத்தி செய்யத் தனிக் கவனம் செலுத்தப்பட்டுவருகிறது. நெடுஞ்சாலைகள் ஓரம்—கால்வாய்க் கரை—கண்மாய்க் கரை—ஊராட்சி ஒன்றியத்தின் புறம்போக்கு நிலங்களில் பசுந்தாள் உரம் பயிரிடப்படும்.

9. கிணறு வெட்டும் திட்டத்தின் கீழ், கிணறு வெட்டும் விவசாயிகளுக்கு 22-வது தவணையாகக் கடன் கொடுக்க இரண்டு கோடியே நாற்பது இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

10. சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு இரண்டு கோடியே ஐம்பத்து மூன்று இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

11. நில அடமான பாங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு 6-கோடியே எழுபது இலட்சம் ரூபாய் கடன் கொடுக்கப்படும்.

12. பம்பு செட்டுகள் அமைக்க ஒரு கோடி ரூபாயும், டிராக்டர்கள், இயந்திரக் கலப்பைகள் வாங்க எழுபது இலட்ச ரூபாயும் கடன் கொடுக்கப்படும்.

13. புதுக்கோட்டை வட்டாரத்தில் ஆயிரம் கிணறுகளும், ஐந்நூறு பம்பு செட்டுகளும் அமைக்கப்படும். கோவைப் பகுதியில் தொண்டாமுத்தூர், பெரியநாயக்கன்பாளையம் பகுதியில் 1,000 கிணறுகளும், 1,000 பம்பு செட்டுகளும் அமைக்கப்படும்.

14. மதுரை மாவட்டம் மேலூர் தாலுகாவில் ஒரு போக சாகுபடி நிலத்தை இரு போக சாகுபடி நிலமாகக் கொண்டுவர இருநூறு கிணறுகளும், இருநூறு பம்பு செட்டுகளும் அமைக்கப்படும்.

15. விவசாய அதிகாரிகள் விவசாயிகளுக்குப் பயிற்சிகள் கொடுப்பதற்கு விவசாயிகள் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்படும். தமிழகம் முழுவதிலும் இப்பயிற்சி நிலையம் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது. தஞ்சை மாவட்டத்தில் இந்த ஆண்டே விவசாயிகள் பயிற்சி நிலையம் தொடங்கப்படவிருக்கிறது.

பர்மா-இலங்கை அகதிகள்

சில சொத்துக்களுடன் வெளியேற அனுமதி

புதுடில்லி, மே 5—

"பர்மாவிலிருந்தும், இலங்கையிலிருந்தும் வெளியேறும் இந்தியர்கள், தங்களுடன் சில சொத்துக்களையும், வீட்டுப் பயன்பாட்டுக்கான சாமான்களையும் எடுத்துச் செல்வதற்கு இந்த நாடுகளின் அரசுகள் அனுமதித்திருக்கின்றன"

என்று வெளி உறவுத்துறைத் துணையமைச்சர் எஸ். பி. சிங், மக்களவையில் தெரிவித்தார்.

"அந்நாடுகளில் இந்தியக் குடிமக்களுக்கு ஏற்படக்கூடிய இடர்பாடுகளைத் தீர்ப்பதில் நமது தூதரகங்கள் ஒத்துழைக்கின்றன" என்றும் அவர் சொன்னார்.

படித்த இளைஞர்களுக்கு அமைச்சர் அழைப்பு

வேளாண்மைத் தொழிலில் ஈடுபட வற்புறுத்தல்

உற்பத்தி பெருக இது ஒன்றே வழி

செங்கற்பட்டு, மே 5—

"படித்த இளைஞர்கள், வேளாண்மைத் தொழிலில ஈடுபட வேண்டும்"

என்று கல்வி---தொழிலமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அழைப்பு விடுத்தார்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் பல்வேறு கிராமங்களிலும் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு முடிந்ததைக் கொண்டாடும் வகையில் கடந்த மூன்று வார காலம் கொண்டாடப்பெற்ற விழாவின் இறுதி நாளில் அமைச்சர் திரு. நெடுஞ்செழியன் கலந்து கொண்டு உரையாற்றினார்.

காட்டான்குளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் ரூ. 20,000 செலவில் கட்டப்பட்டுள்ள வேளாண்மைக் கிடங்கை மே 1-ம் நாள் மாலை அமைச்சர் திறந்து வைத்தார்.

ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு. பி.எஸ். கணபதி தலைமை வகித்தார்.

அமைச்சர் 96 பேருக்கு இலவச நிலப் பட்டா வழங்கினார்.

விழாவுக்கு முன்னதாக அமைச்சர், நந்திவரம் கிராமத்தில் உள்ள நீர் நிலையைப் பார்வையிட்டார்.

அஞ்சூரிலும், புலிக்குடிவனத்திலும் பள்ளிக்கட்டிடங்களை அமைச்சர் திறந்துவைத்தார்.

அமைச்சர் தமது உரையில், உழவர் பெருமக்களின் வாழ்க்கைத் தரம் உயரவேண்டிய அவசியத்தை வற்புறுத்தினார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"அமெரிக்க ஐக்கிய நாட்டில் 11 சதவிகித மக்களே உழவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்; எனினும், அவர்கள் தேவைக்குப் போக, வெளிநாட்டுக்கும் ஏற்றுமதி செய்யும் அளவுக்குக் கோதுமை விளைவிக்கிறார்கள். 70 சதவிகித மக்கள் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ள நமது இந்திய நாட்டுக்கும் அவர்கள் கோதுமை அனுப்பி உதவுகிறார்கள். நாம் அவர்களை நம்பிக் கொண்டிருக்கும் அவலநிலையில் இருக்கிறோம். இந்த நிலையை மாற்ற படித்த இளைஞர்கள் தங்கள் நிலத்தைத் தாங்களே பயிரிட முன்வந்தால்தான் முடியும்."

சின்ன விஷயம்

லூயிக்குப்பின்னால் காமராசர்

புதிய ஏற்பாட்டை எதிரே வைத்துக்கொண்டு 'அன்புள்ளவர்'களுக்குக் கடிதம் எழுதுகிறவர்கள், 'தன்னைத்தானே உயர்த்திக்கொள்பவன் தாழ்த்தப்படுவான்' என்ற வரிகளைக் காமராசருக்கு நினைவுபடுத்த ஏனோ தவறிவிட்டிருக்கிறார்கள்!

'காங்கிரசில் யார் பெரிய மனிதர்?' என்று தொடங்கியிருக்கும் புதிய ஆராய்ச்சியில் தம்மை உயர்த்திக்கொள்ளும் ஆசையில்—பாவம், காமராசர்—வெட்கமில்லாமல் என்னென்னவோ பேசியிருக்கிறார்!

புதிய நாளிதழ் ஒன்றைத் துவக்கிவைத்துப் பேச முயன்ற 'பெரியவர்', காங்கிரசின் முகமூடியைக் கிழித்துக் காட்டியிருக்கிறார்!

"'காமராஜ் கொள்கை — காமராஜ் கொள்கை' என்கிறார்களே—அது எதைத் தெரியுமா? காங்கிரசின் கொள்கையைத் தான்! பலவிதமாகச் சொல்வதற்குப் பதிலாக (சுருக்கமாக), 'காமராஜ் கொள்கை' என்கிறார்கள்; அதற்காக ஏன் வருத்தப்பட வேண்டும்?"

பேச்சின் 'தொனி' புரிகிறதா?

'I am the State'—'நான்தான் அரசு' என்றானாமே—பிரெஞ்சு மன்னன் லூயி—அந்தத் 'தானே யாவும்' என்ற அகங்காரம் அதில் தொனிக்கிறது அல்லவா?

"நிஜலிங்கப்பாவோ, சுப்பிரமணியமோ அல்ல; நானே காங்கிரசு; நான்தான் காங்கிரசு"—காமராசர் குரலின் பொருள் அதுதானே!

மனத் தத்துவம் படித்தவர்களைக் கேட்டால் சொல்லுவார்கள்—**'தங்களை யாரும் சிந்தவில்லை' என்று தாழ்வு மனப்பான்மை கொள்ளும் மூளைதான் இப்படிப் பேசத் தூண்டும்!**

'பெருமைக்குச் சுருக்கு வழி பணிவு' என்பார்கள்; ஆனால் காமராசர்—பாவம்—பெருமையைத் தேடிச் சிறுமையை அல்லவா வாரிக் கட்டிக்கொள்கிறார்?

அதோடா விட்டார் அவர்? இன்றையக் காங்கிரசுக்காரர்களை, விளாசு விளாசு என்று தீட்டி விட்டார், போங்களேன்!

"காமராசர் மறைமுகமாக சுப்பிரமணியத்தைத் தான் தாக்கினார்" என்று வெளிப்படையாகவே சில நாளிதழ்கள், அவர் வயிற்றெரிச்சலைக் கிளப்பியிருக்கின்றன!

பின்னே, காமராசர் பேசியதைப் பாருங்களேன்—

★ "காங்கிரசின் கொள்கைகளைக் காங்கிரசில் உள்ளவர்கள் எல்லோருமே ஏற்றுக் கொண்டிருக்கிறார்களா, என்ன?

★ "காங்கிரசின் கொள்கை பிடிக்காதவர்களும் காங்கிரசில் இருக்கிறார்கள்.

★ "சனநாயக சோஷலிசத்தை ஏற்காதவர்களும் காங்கிரசில் இருக்கிறார்கள்.

★ "தீண்டாமை ஒழிப்புக் கொள்கையை ஏற்காதவர்கள்—பிடிக்காதவர்கள் காங்கிரசில் இருக்கிறார்கள்.

★ "'பாங்கிகளைத் தேசியமயமாக்க வேண்டும்' என்ற கொள்கையை ஏற்க மறுப்பவர்கள் காங்கிரசில் இருக்கிறார்கள்,

★ "சட்டசபைக்குப் போகவேண்டும்—மந்திரியாக வேண்டும் என்ற ஆசை உள்ளவர்களும், இதற்காகக் காங்கிரசில் இருப்பவர்களும் உண்டு.

இவ்வளவும், நேற்றுவரை காங்கிரசின் அனைத்திந்தியத் தலைவராய் இருந்த காமராசர் பேசியது!

தாம் பொறுப்பிலே இருந்தபோது கதவுகளை அகலத் திறந்துவைத்துவிட்டு—கண்டவரையெல்லாம் காங்கிரசில் அங்கம் பெறச் செய்துவிட்டு—இப்போது உண்மை விளக்கம் ஒரு கேடா?

தேர்தலுக்கு முன்னாலே பேரறிஞர் அண்ணா அவர்கள், **'திறந்த வீட்டில் நாய் நுழைவதுபோல்'** யார் யாரோ காங்கிரசில் குடிபுகுந்ததைச் சுட்டிக்காட்டியபோது, பூமிக்கும் ஆகாயத்துக்குமாய்க் குதித்தார்களே—பெருமக்கள்!

காங்கிரசு, 'ஒரு முற்போக்குக் கட்சி' என்று காட்டிக் கொள்ளுவதற்காக என்னவெல்லாம் செய்கிறதோ—அவை அத்தனையையும் எதிர்ப்பவர்கள் காங்கிரசில் இருக்கிறார்களாம்! என்ன அழகாக இருக்கிறது பார்த்தீர்களா?

'என் கொள்கை' என்று தனியே ஒன்றும் இல்லை; என் சிந்தனையைக் காங்கிரசு ஒப்புக்கொண்ட பிறகுதான் நான் வெளியே சொல்லுகிறேன். அதனாலே அது காங்கிரசின் கொள்கைதான்."

என்ன தோன்றும்—'விஷய ஞானம்' போதாத பாமரருக்கு?

காமராசர்தான் காங்கிரசுக்குக் கொள்கை வகுத்துக் கொடுப்பவர் போலவும், அதைக் காங்கிரசு செயற்குழு அப்படியே ஒப்புக்கொள்வது போலவும், அதனாலேதான் அவற்றைக் காமராஜ் கொள்கை என்று சொல்வது போலவும்.....

ஏ அப்பா! எவ்வளவு சரமாரியாக வருகிறது!

'இழந்த இடத்தை எட்டிப் பிடிக்க முடியுமா?' என்று ஆசை கிடந்து அடித்துக் கொள்கிறது--என்ன செய்வார் அவர்!

தம்மை ஏதோ, 'பேரறிஞன்' என்று உலகம் நம்பவேண்டும் என்று முயல்கிறார் காமராசர்! ஆனால், 'பேரறிவு' என்பதில் நூற்றில் ஒரு பகுதிதான் உள்ளுணர்ச்சியும் சுய சிந்தனையும்! மீதி 99 பகுதி உழைப்பின் பலன்! சும்மா குறட்டை விட்டுத் தூங்கினால் பேரறிவு வந்துவிடாது!

சில இடங்களில் தற்புகழ்ச்சி தேவைதான்; ஆனால், அதற்கும் ஓர் அளவில்லையா என்ன?

காமராசர் விஷயத்தில் தற்பெருமை—மன்னிக்க—தற்புகழ்ச்சி நெடியடிக்கிறது!

—பூரணன்

வியட்நாம் போரினால் அல்லலுறும் மக்கள்

அமைதிக்குப்பின் உதவி--பிரிட்டன் உறுதி

"சமாதான உடன்பாடு ஏற்பட்டால், அதனைத் தொடர்ந்து போர்க் கொடுமைகளிலிருந்து விடுபட, வியட்நாம் மக்களுக்கு பிரிட்டன் தன்னாலான எல்லா உதவிகளையும் செய்யும்"

என்று பிரிட்டிஷ் தலைமையமைச்சர் வில்சன் கூறியுள்ளார்.

"துயர் தணிப்புக்காக உலக நாடுகள் ஒன்று சேர்ந்து பணியாற்ற முன்வந்தால், அதில் பிரிட்டனும் பங்கேற்கும்" என்று அவர் பிரிட்டன் மக்கள் சபையில் அறிவித்தார்.

நெல்லூர் நகராட்சிக்கு டில்லிப் பரிசு

புதுடில்லி, மே 5—

நகரப் பகுதிகளில் கலப்பு உரம் தயாரித்துச் சிறந்த முறையில் விநியோகம் செய்யும் நகராட்சி மன்றங்களுக்கு விருது வழங்கும் திட்டத்தின்படி, 1965-66 - [illegible] ஆண்டில், ஆந்திர மாநிலத்தில் உள்ள நெல்லூர் நகராட்சி மிகச் சிறந்தது என்று தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது.

சென்ற ஆண்டு தமிழ்நாட்டில் உள்ள மதுரை நகராட்சி இந்த விருதைப் பெற்றது.

காட்சியோடு கருத்துக்களைப் பெறும் வாய்ப்பு ஏற்படும்

ஏராளமானோர் பயன்பெற இயலும்

அரசு செய்யும் நல்ல பணிகளை விரைவில் மக்கள் அறிந்துகொள்ளப் பயன்படும்

'தமிழக அரசு செய்திப் படத் தொகுப்புத் துறையின் நோக்கம்--அமைச்சர்கள் நெடுஞ்செழியன், கருணாநிதி, முத்துசாமி விளக்கம்

சென்னை, மே 6—

"நாட்டு நன்மைக்காகச் செய்யப்படும் நல்ல காரியங்களை--பொது நிகழ்ச்சிகளை, ஏடுகளை வீடு கொடுத்து வாங்கிப் படித்துத் தெரிந்து கொள்பவர்களின் எண்ணிக்கையை--நம் முடைய நாட்டைப் பொறுத்தவரையில்—மிகக் குறைவு; ஒரு சிலரால்தான் இப்படி அறிந்துகொள்ள முடிகிறது.

"படித்துப் புரிந்து கொள்ளுவதைவிட—எடுத்துச் சொல்லக் கேட்டுத் தெரிந்துகொள்ளுவதைவிட—அவை அனைத்தையும் கண்ணும், காதும் ரசக்கத்தக்க வகையில் திரைப் படமாவது, எல்லா வகையிலும் ஏராளமானவர்கள் பயன்படும்படியாகவும் ஏற்படும்; எல்லாத் தரப்பினரும்--நிலையினரும் காட்சியோடு கருத்துக்களைப் பெறும் நிலை இதனால் ஏற்படும்.

"தொலைக் காட்சி (டெலிவிஷன்) இருக்கின்ற நாடாக இருந்தால் இந்த நிலை தேவையில்லை; வீட்டிலிருந்தவாறே நாட்டில் நடைபெறும் நிகழ்ச்சிகளை நேரடியாகக் கண்டறியும் வாய்ப்பு ஏற்படும். நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில், 'அந்த நிலை விரைவில் வரும்' என்ற நிலை இல்லை; அப்படிப் பட்ட நிலை ஏற்பட்டாலும், எல்லோருடைய வீடுகளுக்கும் இந்த வசதி கிடைப்பதற்கான வாய்ப்பு இல்லை; சிலருக்கு மட்டுந்தான் அந்த வசதி கிட்டும்!"

இவ்வாறு, 'தமிழக அரசு செய்திப் படத் தொகுப்பு' தொடக்க விழாவில் உரையாற்றுகையில், கலவியமைச்சர் திரு. இரா. நெடுஞ் செழியன் அவர்கள் விளக்கிக் கூறினர்.

இந்திய அரசு, 'செய்திக் கதிர்' (நியூஸ் ரீல்) தயாரிப்பதுபோல், தமிழ்ந் அரசும் தனியாகச் செய்திப் படம் தயாரிக்க முனைக்குக் கிறது; இதன் தொடக்க விழா ஏப். 3-ம் நாள் மாலை பாலர் அரங்கில் நடைபெற்றது.

விழாவிற்கு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி தலைமைதாங்கினர்.

தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. இராமகிருஷ்ணன், அன்வையும் வரவேற்புரை.

மா. முத்துசாமி

விழாவிற்குத் தலைமையேற்ற அமைச்சர் முத்துசாமி பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"அனேத்திற்கிய மாட்டத்தில் தயாரிக்கப்படும் செய்திப் படங்கள், பெருப்பு ளும், மாலிலங்களின் சுழற்றிலைக்கேற்ப இருந்திதில்லை; குறிப்பாக, 'தமிழகத்தின் திட்டங்கள், நிறைவுகள்' இருந்தது தில்லை' என்று குறைபாடு இருந்துவந்தது.

"நமக்கென்று வசதி--வாய்ப்பு என்ன உருவாக்கிக்கொள்வதில் இவ்வளவு காலமும் அக்கறை யற்று இருந்துவிட்டோம்!

"மாலில அரசு செய்திருக்கின்ற காரியங்களை நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்வதும், உதிய ஆக்கங்களைச் செய்து தருவதும் நமது கடமையாகும். அதை முறையில், தமிழக ;அரசின் செய்தித் துறை, இந்த நல்ல முயற்சியினைத் தொடங்கிருக் கிறது."

இரா. நெடுஞ்செழியன்

செய்திப் படப் பிரிவைத் தொடக்கிவைத்து, கலவியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகையில் மேலும் குறிப்பிட்டதாவது:—

"ஏற்கனவே மத்திய அரசு, 'செய்திக் கதிர்' என்ற பெயரில் படங்களை செய்திப் படங்கள் பல்வேறு செய்திப் படங்கள் பத்து நிமிடம் அளவில் காட்டி வருகிறது; அதில், தமிழகத்தைப் பொறுத்தப்பட்டில், அதிகமும் இடம் தரப்படாத நிலை இருந்து நிறுத. பத்து நிமிடத்தில் இரண்டு நிமிடங்கட, தமிழகத்தைப் பற்றியதாக இருக்காது; அப்படிக் காட்டுவதிலும் நம் முடைய முகங்களைப் பார்க்க முடியாதில்லை!

"எனவே, தமிழக அரசின் சார்பில்—தமிழக மக்களின் நன்மையடையத்தக்கவிதத்தில், 'தமிழக அரசு -- செய்திப் படத் தொகுப்பு' அமைப்பு ஏற்படுத்தப்படலாகுகிறது; இதன்மூலம் அரசின் கருத்துக்களை மக்கள் மனதில் பதியவைக்க இயலுமென நம்புகிறோன்."

மு. கருணாநிதி

படத் தொகுப்புச் சுருள் வெளியிட்டு, பொதுப் பணித்துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தமிழக அரசின் சார்பில்—அரசின் நலிப்பட்ட முறையில் இது போன்ற செய்தித் தொகுப்புகளை வெளியிடுவதற்குக் காரணம், இந்திய அரசு தயாரிக்கும் தொகுப்புகளில் — பல வேறு மாலிலங்களின் செய்தி னேத தொகுத்தளிக்க வேண்டியிருப்பதால், தமிழ்த்தின் செய்திகளை உரிய அளவு எடுத்துக்காட்டி இயலாத நிலே இருக்கிறது என் பதுதான்.

"உதாரணத்திற்கு ஒன்றைக் குறிப்பிடலாம்! ஒரோடு நிறுப்போடும் சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டு நிகழ்ச்சிகளை, இந்தியச் செய்திப் படத் துணையினர் படமாக்கினர்; அதில், உலகத் தமிழ் மாநாடு வெற்றிபெற முன்னணியிலிருந்த தமிழக முதலமைச்சர்— பேரறிஞர் அண்ணா அவர்களைக் காண முடியவில்லே!

"இதை, 'அரசியல் காரணம்' என்றா கான் சொல்ல வேம்பவில்லை; பலவேறு தொகுதி களிக்கின்ற காரணத்தால், நாம் பெரிதென்று நினைக்கின்றவை—சிறப்பானதென்று கருதுகின்றவை—ம் மாலிலத்துக்குத் தேவையானதென்று எண்ணுகின்ற ஒன்றை இந்திய அரசின் செய்திதுறை, நிறைவானதாக்க முடியவில்லே. அப்படிப்பட்ட குறையைப் போக்கிக் கொள்ளவே, நாமாக இப்படிப்பட்ட படத் தொகுப்புகளை வெளியிட முன்வந்திருக்கிறோம்.

"ஆளுங்கட்சியின் விளம்பரத் திற்காக இந்த முயற்சி மேற் கொள்ளப்படவில்லே. எட்சி சார் பற்ற முறையில்—நாட்டு நன் மைக்காக செய்யப்படும் நல்ல காரியங்களைப் பற்றிய செய்தி களைப் பரப்புவதே இந்தத் தொ யின் முக்கிய நோக்கமாகும்.

"அரசினரால் செயயப்படுகின்ற நல்ல காரியங்களே விரைவாக மக்கள் அறிந்துகொள்ளவும், அப்படிப்பட்ட நல்ல காரியங் களைச் செய்பவர்களுக்கு மக்கள் ஒத்துழைப்புத் தந்திடவும் இது போன்ற செய்திப்படத் தொகுப் புகள் மெத்தவும் பயன்படும்."

விழா முடிவில், செய்தி ஒருங் கிணைப்புக் குழுத் தலேவர் ஏ எஸ் பலகிருஷ்ணன் நன்றி கூறினர்.

காங்கிரசு ஆட்சி வழங்கிய பரிசு!

"இருபதாண்டுக்காலக் காங்கிரசு ஆட்சியில், காங் கிரசு ஆட்சியில், காம் பிறந்த பொன்னாட்டுக்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டக்கூட முடியவில்லே! சமுகம் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் அதற் கான தீர்மானத்தை நிறை வேற்றினோம்!

"பசி, பட்டினி, வாழ வழியில்லாமல் பெரும்பகுதக் குழந்தை களோடு தாய்மார்கள் தற் கொலே செய்து கொள்ளுதல் ஆகியவைதாம், காங்கிரசு ஆட்சியில் மக்களுக்குக் கிடைத்த பரிசுகள்! நாட்டு மக்கள் இவற்றையெல்லாம் மறந்தாவிட்டார்கள்?

"ஒராண்டுக் காலத்தில் இத்த கைய அவலநிலையை மாற்றி நல்லதோர் சூழ்நிலேயை நாட்டில் ஏற்படுத்தியது தி. மு. கழக ஆட்சியல்லவா!"

-- மதுரை எஸ். முத்து

(சென்னை 91-வது வட்டப் பொதுக்கூட்டத்தில்)

கழக அரசைக் கவிழ்க்க இயலாது!

சென்னை. மே 4—

"கழகம் வளர்ந்துவருகிறது; கழக ஆட்சியை மக்கள் ஆதரிக்கிறார்கள்; இதுகண்டு காங் ரெசுக் தலேவர்கள் பொது மைப்பட்டுப் பொய்ப் பிரசாரத் தில் இறங்கியுள்ளனர்.

"காமராசர், மக்தவத்சலம், கப் பிமலனியம் போன்றோர், முன் றுக்குப் பின் முறுகப் பேசி இந்த ஆட்சியைக் கவிழ்க்க எண்ணுகிறார்கள்; ஆனால் மக்களோ அதற்கு மாறாக, ஆட்சியை ஆதரிக்கிறார்கள்!

"இந்த அரசு, 'மக்கள் அரசு' என்பதை மக்கள் நன்கு உணர்ந்துகொண்டனர்; இனி, இந்த அரசை மாறலும் அழிக்கவோ, கவிழ்க்கவோ முடியாது!"

—அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

(சென்னை 72-வது வட்டப் பொதுகூட்டத்தில்)

தொழிலாளர் நலம்பேணுவதில் தமிழக அரசு காட்டும் அக்கறை

டில்லியில் அமைச்சர் செ. மாதவன் வெளியிட்ட துணிச்சலான கருத்து

ஆலேத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் பாராட்டு

1—5—68 காலை 10-மணியளவில் திருச்சி மாவட்ட ஆலேத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கக் கரூர் கிளேயின் (கரூர் மில், மங்கச்சோவிளார் மில், இரண்டிலுடைய) பேரவைக் கூட்டம், சங்கத் தலேவர் பரமத்தி சண்முகம் தலேமையில் நடைபெற்றது; அது போது சில முடிவுகள் ஒருமனதாக எடுக்கப்பட்டன; அவைகளில் முக்கியமானவை வருமாறு:—

அண்மையில் டெல்லியில் தமிழகத் தைச் சேர்ந்தவர்களால் தீர்ப்புக் கள் சட்ட அங்கீகாரம் பெருமளவில், அவை வேறும் சிபாரிசுகளாகவே இருப்பதால் அவை களால் தொழிலாளர்களுக்குக் கிடைக்கவேண்டிய நியாயம் உரிய காலத்தில் கிடைக்கவில்லே என்றும் குறிப்பாக சம்பள போர்டு முடிவுகள் நான்கு ஐந்தாண்டுகள் வேறும் சிபாரிசு என்ற நலையிலேயே நிர்வாகத்தினர்களால் அமல்சியப்படுத்தப்படுவதைச் சுட்டிக் காட்டியும் இப்படிப்பட்ட தீர்ப்புக்கே அழுல படுத்தும் போதுப மாலில அரசுகளுக்கு இருக்கவேண்டிய அவசியத்தை மத்திய அரசுக்கு வற்புறுத்திப் பேசியுள்ளதான தொழிலாளர் வர்க்கத்தின் உண்மையான உள் ளக்கிடக்கையை உரிமைக் குரலே வெளிப்படுத்தியதாய் அமைந்துள் ளது என்று இப்பேரவை கருது வதோடு இரு 'ரான்டுக்கால வரு வாற்றில் எந்தத் தொழிலாளர் கவு அமைச்சரும் கறிபிராத ஒரு கருத்தை மிகவும் துணிச்சலுடன் எடுத்துக் கூறி வாதாடியுள்ள மைக்காக நமது தமிழ் நாடு தொழி லாளர் நல அமைச்சர் திரு மாத வன் அவர்கள் இக்கூட்டம் பாராட்டுவதோடு இந்த மேன்மை மிகு பாராட்டலினே வர்க்கத்தின் நன்றி யுணர்ச்சியை யும் தமிழக அரசுக் குத் தெரிவித்துக்கொள்கிறது.

முன்பு இருந்த அரசு மோனே விடுமுறை நாளாக அறிவிக்க

கோபியில் கல்லூரி நிறுவ ரூ. 50,000

அந்தியூர் ஊராட்சி ஒன்றியம் நன்கொடை

29 4 68-ல், அந்தியூர் ஊராட்சி ஒன்றியத்தின் சாதாரணக் கூட்டம், தலேவர் திரு. கே. கே. சுப்பிர மணிய ம் தலேமையில் நடந்தது; அதபோது, கோவை மாவட்டத்தில் விரைவாட்டு அரங்ம (ஸ்டேடியம்) சட்டவதற்கு ரூ. 5 001 கன் கொடையாக ஊராட்சி ஒன்றியம் பொது நிதியிலிருந்து கொடுக்கவா மெனவும், கோபிசெட்டிபாளயத் தில் சமீபக் கல்லூரி கட்டவதற்கு ரூ. 50,000 பொது நிதியிலிருந்து நன்கொடையாகக் கொடுக்கவும் மெனவும், ஊராட்சி ஒன்றியத்தின் உறபத்திக்கு முக்கிய தொழிற் வேல (அர்திபூ), திரு. முனிசி சாமி (அச்சகர்), திரு. துரைசாமி (துறப்பாளம்) ஆகியோரை உறுப்பினர்களாக நியமிக்கலா மெனவும் முடிவு செய்யப்பட்டது.

1968—69-ம் ஆண்டிற்கு வில சாமம், சால்ட்டை, மீன்வளம் ஆகிய திட்டங்களுக்கு கீழ்க்கண்ட தொகை ஒதுக்கீடு செய்து தீர்மா னிக்கப்பட்டது:—

விவசாய வளர்ச்சி	ரூ. 29,000
கால்நடை வளர்ச்சி	ரூ. 8,030
மீன் வளர்ச்சி	ரூ. 1,800

மற்றும் பல தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன. அன்தியூர் சட்ட மன்ற உறுப்பினர் திரு. ஏ. எம். ஈடராசன், ஆணையாளர் டி. ரே. வெங்காலமம் எம்.ஏ. ஆகியோர் ஒன்றிய கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

அரசு இன்ஜினீயரிங்கல்லூரி நிட்டம்

தமிழகத்தில் விரிவாகிறது

புதுடில்லி, மே 4—

தமிழ்நாட்டில் ஒட்டப்பள்ளி, பள்ளிப்பாளயம் பகுதிகளுக்கு ஜாழி யர் அரசாங்க இன்ஜினீயரிங்க் திட்டம் விரிவுபடுத்தப்பட்டிருக்கி றது. இதலுல், மேலும் 1100 ஜாழியாள் நிடத்தின் நன்மை பெறுவார்கள்.

இத்திட்டத்தின்படி ஜாழியர் களுக்கும், அவர்களது குடும்பத் தாருக்கும் மருத்துவ வசதிகள் கிடைக்கும். இந்தப் பகுதிகளில் மருத்துவ வசதி அளிக்கும் பொறுப்பை மாலில அரசு ஏற்கும்.

தொழிற்சாலே நிர்வாகிகள் மொத்த தீர்மத தொகையின் மூன்று சதவிகிதத்தை இத்திட்டத் திற்கென சந்தாவாகக் கொடுக்க வேண்டும்.

மறுத்துவத்தற்கு மாருக இன் றைய அரசு தொழிலாளி வர்க்கத் தின் விருப்பத்துக்கிணங்க விடு முறை நாளாக அறிவித்தது குறித்து தமிழக அரசுக்கு நன்றி தெரிவிக்கப்படுகிறது.

திருச்சி மாவட்டத் தொழிற்சங் கத் தலேவர் திரு. எம். எஸ். மணி எம்.எல்.ஏ. இருப்பு கோய் காரண மாய் வேலூர் மருத்துவமனையில் சேர்க்துள்ளமையால் அன்னர் விரைவில் நலமாக வீடு திரும்ப விக்கட்டம் தனது விருப்பத்தை யும் வாழ்த்தினேயும் தெரிவித்துக் கொள்கிறது.

பள்ளி மாறும் ஆசிரியர்களின் சம்பள விதிதம்

தமிழக அரசு முடிவு -- அமைச்சர் விளக்கம்

சென்னை, மே 6—

அரசு உதவிபெறும் துவக்கப் பள்ளி அல்லது பயிற்சிப் பள்ளியைச் சேர்ந்த ஓர் ஆசிரியர் நிராஜிஞமாச் செய்துவிட்டு மற்றோர் உதவி பெறும் துவக்கப் பள்ளியில் சேர்ந்தால், முதல் பள்ளியில் சிப்பந்திகள் மானியத்தை நிர்ணயிப்பதற்குக் கணக்கில் எடுத்துக்கொண்ட சம்பளம் புதிய பள்ளியும் அமுலுக்கு வரப்படும்.

அரசு செய்துள்ள இந்த முடிவை, கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் செய்தியாளர்களிடம் தெரிவித் தார்.

புதிய பள்ளியில் சேரும் ஆசிரியர்களுடைய அடுத்த சம்பள உயர்வு காலம், அவர் புதிய பள்ளியில் சேரும் காலிலருந்து கணக்கிடப்படும்; ஆனால், சப்பந்தப் பட்ட ஆசிரியர் அல்லது ஆசிரியை அவருடைய சம்பள விகிதத்தில் அதிகப்பட்ச வரம்பை அடைந்திருக்கக்கூடாது.

ஓர் உதவிபெறும் செகண்டரி பள்ளி அல்லது பயிற்சிப் பள்ளியிலிருந்து இரஜிஞமாச் செய்துவிட்டு மற்றோர் உதவிபெறும் செகண்டரிப் பள்ளி அல்லது பயிற்சிப் பள்ளியில் சேரும் ஆசிரியர்களுக்கு, ஏற்கனவே இங்ச் சலுகை வழங்கப்படுவதில்லே.

"அரசினர் பள்ளிகளிலிருந்தோ அல்லது உள்ளாட்சினர்ப் பள்ளிகளிலிருந்தோ இராஜிஞமாச் செய்துவிட்டு, உதவிபெறும் துவக்கப் பள்ளிகளில் சேரும் ஆசிரியர்களுக்கு இந்த சலுகை கிடையாது"

என்று அமைச்சர் ஐயத்திற்கு இட மின்றி விளக்கினர்; அவ்வாறு சேரும் ஆசிரியர்களுக்கு அந்தச் சம்பள விகிதத்தில் அமுலுக்கப் படும் குறைந்தபட்ச உயர்வுதான் தரப்படும்.

அரசினர் பள்ளிகளிலும், உள் ளாட்சிமன்றப் பள்ளிகளிலும் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள சர் வீசு சம்பள உயர்வுக்குக் கணக் கில் சேர்த்துக்கொள்ளப்படமாட் டாது.

அரசினர் பள்ளிகளிலும், உள் ளாட்சிமன்றப் பள்ளிகளிலும் பணியாற்றும் ஆசிரியர்கள், தமது வருங்கால வளன்களுக் கருதி, உதவிபெறும் பள்ளிகளுக்கு மாறக் கூடாதென்று அவர்கள் அப்படிச் செய்தால் அந்தப் பதவிக்கு அனு மதிக்கப்படும் குறைந்தபட்ச சம்ப ளமே நிரணயிக்கப்படும் என்றும் எல்லோர் கல்வி நிறுவனங்களுக் கும் தெரிவிக்குமாறு செகண்டரிக் கல்வி இயக்குநர் கேட்டுக்கொள் ளப்பட்டிருக்கிறார்.

சென்னை குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு

எதிர்காலத் தேவையையும் கருத்தில் கொண்டு திட்டம்

தமிழக அரசின் முயற்சி--டில்லி பரிசீலிக்கிறதாம்

சென்னை, மே 6—

சென்னை நகர மக்கள் தொகைப் பெருக்கத்திற்கேற்பத் தண்ணீர்த் தேவை அதிகரிப்பதால், சென்னைக்குக் குடிநீர்த் திட்டம், மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

சென்னை நகரின் மக்கள் தொகை 1961-ம் ஆண்டில் 17 இலட்சத்து 29 ஆயிரமாக இருந்தது; 1991-ம் ஆண்டில், 35 இலட்சமாகப் பெருகும்; அப்போது ஒரு நாளைக்கு 17 கோடி 50 இலட்சம் காலன் தண்ணீர் தேவைப்படும்.

1981-ம் ஆண்டில், சென்னை நகர மக்கள் தொகை, 26 இலட்சமாக உயருமென எதிர்பார்க்கப்படுகிறது; அப்போது, 11 கோடி காலன் தண்ணீர் தேவைப்படும்.

இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு தமிழக அரசு, வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குக் காவிரி நீரைக் கொண்டுவர ரூ. 21 கோடியே 30 இலட்சம் செலவாகும் திட்டமொன்றைத் தயாரித்து மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறது; இத்திட்டத்தின்படி சென்னைக்கு 4 கோடி காலன் தண்ணீர் கிடைக்கும்.

தமிழக அரசு தயாரித்துள்ள இத்திட்டத்தை, மத்திய அரசு, இப்போது பரிசீலனை செய்துவருகிறதாம்.

வீராணம் ஏரி, சென்னையிலிருந்து 135 மைல் தூரத்தில் இருக்கிறது; காங்கிரீட் குழாய் மூலம் அங்கிருந்து தண்ணீர் கொண்டுவரத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

தற்போது சென்னை நகருக்கு சோழவரம் ஏரி—சத்தியமூர்த்தி நீர்த் தேக்கம்—செங்குன்றம் ஏரி ஆகியவைகளிலிருந்து ஒரு நாளைக்கு 3 கோடியே 5 இலட்சம் காலன் தண்ணீர் சென்னைக்குக் கிடைக்கிறது; தண்ணீர்த் தட்டுப்பாடு உள்ள நேரத்தில் 1 கோடியே 20 இலட்சம் காலன் தண்ணீர் மட்டுமே கிடைக்கிறது.

பூமிக்கு அடியிலுள்ள தண்ணீரை வெளியே கொண்டுவரத் திட்டமிடப்பட்டால், ஒரு நாளைக்கு 3 கோடி காலன் தண்ணீர்தான் கிடைக்கும்.

மேலவைத் இடைத் தேர்தல்

மே 10-ம் நாள் வாக்கு பதிவு

சென்னை, மே 6—

தென்னாற்காடு மாவட்ட உள்ளாட்சித் துறை தொகுதியில் தமிழகச் சட்டமன்ற மேலவைத் தேர்தல் மே 10-ம் நாள் நடைபெறும்.

மேலவை உறுப்பினர் திரு. ஜெங்கால் ரெட்டியார் மறைவு காரணமாக இந்த இடைத் தேர்தல் நடைபெறுகிறது. வாக்குப் பதிவு காலை 8-மணி முதல் மாலை 5-மணி வரை நடைபெறும்.

இத்தேர்தலில் சமுக வேட்பாளராக தென்னாற்காடு மாவட்டச் செயலாளர் திரு. இரா. சாம்பசிவம் அவர்கள் போட்டியிடுவது தெரிந்ததே.

மருத்துவமனையில்

அமைச்சர்

ஏ. கோவிந்தசாமி

சென்னை, மே 5—

வேளாண்மைத்துறை யமைச்சர் திரு ஏ. கோவிந்தசாமி அவர்கள் திடீரென உடல்நிலை பாதிக்கப்பட்டு, தமது சுற்றுப் பயண நிகழ்ச்சிகளை ரத்து செய்துவிட்டு, சென்னை மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்துள்ளார்.

வயிற்றுக் கோளாறு காரணமாக உடல்நிலை பாதிக்கப்பட்ட அமைச்சர் தற்போது குணமடைந்து வருகிறார். இன்னும் சில நாட்கள் ஓய்வு தேவை என்று மருத்துவர்கள் கூறியிருக்கிறார்கள்.

அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, மா. முத்துசாமி, சாதிக் பாட்சா, அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி, அரசு வழக்கறிஞர் திரு. கே. நாராயணசாமி, துணை மேயர் பவளவண்ணன் ஆகியோர் அமைச்சர் கோவிந்தசாமி அவர்களைக் கண்டு உடல்நிலை குறித்து விசாரித்தனர்.

அமைச்சர் கோவிந்தசாமி அவர்களுக்கு முழு ஓய்வு தேவைப்படுவதால் சமுகத் தோழர்கள் யாரும் அவரைப் பார்க்க வரவேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பேராசிரியர்

அன்பழகனுக்குக் கார் பரிசளிப்பு விழா

8 5—68 மாலை 6-மணிக்கு நாமக்கல் திரு. வி. க. பாறையில்

தலைவர்:

ஜி. பி சோமசுந்தரம் எம்.பி.

கார் வழங்குபவர்:

அமைச்சர் மு. கருணாநிதி

பாராட்டுரை வழங்குவோர்:

அமைச்சர் மா. முத்துசாமி
ஈ.ஆர். கிருஷ்ணன் எம்.எல்.ஏ.
சி. வே. வேலப்பன் எம்.எல்.ஏ.
ப. தா. முத்து எம்.எல்.சி.
என். ஏ. நடேசன்
தியாகராசன்
அருணகிரி பி.காம்.

உதகை இரயில் பாதையை அகற்றக்கூடாது

நாடாளுமன்ற ஆலோசனைக் குழுவில் கடும் எதிர்ப்பு

புதுடில்லி, மே 6—

மேட்டுப்பாளையம் – உதகை இரயில் பாதையை எடுத்துவிட எண்ணியிருப்பதை, தென் பகுதி இரயில்வே சம்பந்தமான நாடாளுமன்ற ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்கள் அனைவருமே எதிர்க்கின்றனர்!

இந்த இரயில் பாதையில் பிரயாணம் செய்வோர், வழிநெடுக இயற்கை எழில் மிகுந்த காட்சிகளைப் பார்த்துக்கொண்டு செல்கிறார்கள். காப்பித் தோட்டங்கள், தேயிலைத் தோட்டங்கள் முதலியன வழிநெடுக காணப்படுகின்றன. ஆகவே, மேட்டுப்பாளையம் – உதகை இரமில் பாதை மிகவும் பயன் உள்ளது என்பது மட்டுமல்ல; இந்தப் பாதையில் பயணம் செய்வதை அந்நியர்கள் விரும்புகின்றனர். இரயில் பாதையில் 'பற்கள்' போன்ற சாதனங்கள் இருப்பதால், பயணமும் நல்ல பாதுகாப்புடன் அமைந்திருக்கிறது.

"இந்தப் பகுதியில் மோட்டார் போக்குவரத்து மிகவும் வளர்ச்சியடைந்திருக்கிறது" என இரயில்வே அமைச்சர் புனாச்சா கூறியதாகத் தெரிகிறது.

"இலாபமாக இல்லாத இரயில் பாதைகளை மூடுவது சம்பந்தமாக அவசரப்பட்டு நடவடிக்கை எதுவும் எடுக்கப்படமாட்டாது" என்றும் அவர் கூறியிருக்கிறார்.

சம்பந்தப்பட்ட முதலமைச்சர்களுடன் இப்பிரச்சினைபற்றி விவாதிக்கப்படும் என்றும் மாநில அரசுகளுடன் ஆலோசனை கலந்தபிறகே முடிவு செய்யப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

"பெங்களூர்-சேலம் இரயில் பாதையில், தருமபுரி-பெங்களூர் பிரிவு அடுத்த மாதம் உருவாகி விடும் என எதிர்பார்க்கப்படுகிறது; ஏற்கனவே சேலம்-தருமபுரி பிரிவு போக்குவரத்துக்குத் திறந்து விடப்பட்டிருக்கிறது" என்றும் அவர் கூறியுள்ளார்.

'கார்டைட்' வெடிபொருள் தொழிற்சாலை இயங்கும் 'அரவங்காடு' என்னும் இடமும் இந்த இரயில் பாதைப் பகுதியில் இருப்பதைச் சில உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினர்.

"எஞ்சின் டிரைவர்கள், பயர்மென்கள் ஆகியோருக்கும்—காண்டிராக்டர்களுக்கும் இடையைக் கரியைத் தள்ளுவது பற்றிய உடன்பாடு இருப்பதாகத் தெரிகிறது.

"இவ்விதமாகக் கோடிக்கணக்கான ரூபாய் இரயில்வேக்களுக்கு இழப்பு ஏற்பட்டு வருகிறது."

கல்லக்குடி ஏன் கூடாது?

டால்மியாபுரம் இரயில் நிலையத்தை, 'கல்லக்குடி' என்று மாற்றுவது பற்றிச் சிறிது விவாதம் நடைபெற்றது.

'கள்ளிக்குடி' என்ற பெயருடன் ஏற்கனவே ஒரு நிலையம் இருப்பதாகக் கூறி இரயில்வே அதிகாரிகள் ஆட்சேபணை தெரிவித்தனர்.

'கல்லக்குடி' என்பதைத் தமிழில் எழுதுகையில் குழப்பம் ஏற்படாது என்றும், இரு பெயர்களுக்குமிடையே வேறுபாடு இருப்பதாகவும் உறுப்பினர்கள் கூறினர்; ஆனால், இந்தப் பிரச்சினை பற்றி யாதொரு முடிவும் ஏற்படவில்லை.

3000 புதிய அஞ்சல் நிலையங்கள் திறக்கப்பட்டன!

"1967—68-ஆம் ஆண்டில், இந்நாட்டில் மொத்தம் 2,917 அஞ்சல் நிலையங்கள் திறக்கப்பட்டன; அவற்றில் 2,668 நிலையங்கள் கிராமப் பகுதிகளிலும், எஞ்சியவை நகரங்களிலும் திறக்கப்பட்டன; உத்தரப் பிரதேசத்தில் தான் மிக அதிக எண்ணிக்கையில்—அதாவது 442 நிலையங்கள்—திறக்கப்பட்டன; குசராத்தில் 356 நிலையங்களும், மைசூரில் 324 நிலையங்களும் திறக்கப்பட்டன; எல்லை மாநிலமான அசாமில் கிராமப் பகுதிகளில் 109 அஞ்சல் நிலையங்களும், நகரப் பகுதிகளில் மூன்று அஞ்சல் நிலையங்களும் திறக்கப்பட்டன"

என்று நாடாளுமன்றத்தில் தகவல் தரப்பட்டிருக்கிறது.

பெங்களூர் --- மதுரை --- தூத்துக்குடிக்கு அகல இரயில் பாதை

திட்டம் ஆலோசிக்கப்படுவதாக தகவல்

புதுடில்லி, மே 6—

இந்திய இரயில்வேக்களில் 15 முக்கிய குறுகிய (மீட்டர் கேஜ்) பாதைகளை (பிராட் கேஜ்) பாதைகளாக மாற்றுவதற்கான திட்டமொன்றை இரயில்வேக்கள் தயாரித்து வருகின்றன.

இவற்றில் பெரும்பாலானவை மேற்கு, தெற்கு, கிழக்கு, வடகிழக்கு இரயில்வேக்களில் உள்ளன.

பெங்களூரிலிருந்து மதுரைக்குத் திண்டுக்கல் வழியாக அகலப் பாதை அமைப்பது பற்றியும், மதுரை – தூத்துக்குடி, மணியாச்சி – திருநெல்வேலி பாதைகளை அகலப் பாதைகளாக்குவது பற்றியும் இரயில்வேக்கள் பரிசீலித்துக் கொண்டிருக்கின்றன.

காரைக்குடியிலிருந்து திருத்துறைப்பூண்டிக்கு அதிகப்படி இரயில் விடும் வாய்ப்புப்பற்றியும் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

திறந்தவெளி சிறையில் விவசாயப் பண்ணை

கைதிகளேபணியாற்றுவர்

கூலி—குடிசை வசதி உண்டு

வேலூர், மே 6—

வேலூருக்கு அருகில் உருவாக்கப்படும் திறந்தவெளிச் சிறையில், தொரப்பாடி மத்திய சிறையில் குறுகிய காலத் தண்டனை அனுபவித்துவரும் கைதிகளைக் கொண்டு விவசாயப் பண்ணை அமைக்க முயற்சிகள் நடைபெறுகின்றன.

இதுபற்றி சிறை அதிகாரி எத்திராசன் கூறியிருப்பதாவது:—

"வேலூரை அடுத்த பகுதியில் திறந்தவெளிச் சிறை அமைக்க 200 ஏக்கர் நிலம் பார்த்து வருகிறோம்; அங்கு விவசாயப் பண்ணையும் ஏற்படுத்தப்படும்.

"விவசாயப் பண்ணையின் வேலைகளை சிறைக் கைதிகளே செய்வர். அவர்களுக்குக் கூலியும், அவர்கள் தங்குவதற்குக்குடிசைகளும் போட்டுத் தரப்படும்.

"இதுபோன்ற திறந்தவெளிச் சிறைகள், திருச்சி, மதுரை ஆகிய இடங்களிலும் ஏற்படுத்தத் தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது."

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

8--5--68

காட்டுப்பாடி

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு செங்குட்டையில்; தலைவர்: ஜி. கிருஷ்ணன்; பேசுவோர்: அமைச்சர் கே. ஏ. மதியழகன், மா. பா. சாரதி எம்.எல்.ஏ., பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., பி. செயராமன் எம்.எல்.ஏ., ஜி. நடராசன் எம். எல். ஏ., எம் பி. வடிவேல், ஆர். சம்பங்கி பி. கே. முனுசாமி, டி. சாம்பசிவம், கே. சி. வரதராசன் பி.ஏ., கே. ஜி. முனியப்பபா, இலக்குவனார், எஸ். கிருஷ்ணன், எஸ். கந்தசாமி.

குடியேற்றம்

எம். ஜி. ஆர். ரசிகர் மன்றச் சார்பில், மாலை 6-மணிக்கு குளக்கரையில்; தலைவர்: ஜி. கண்ணாயிரம்; பேசுவோர்: வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல் ஏ., பி. செயராமன் எம்.எல்.ஏ., ஏ. வி. துரைசாமி, செ. மா. இரங்கசாமி மு. க. மெய்ஞானம், மற்றும் பலர்.

அமைச்சர்

சத்தியவாணிமுத்து உடல்நிலை

அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள் ஜெய்ப்பூருக்குச் சென்று திரும்பியதும், காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளார்.

'டைபாய்டு' காய்ச்சலாக இருக்குமோ என ஐயப்படுவதால், அவர் கலந்துகொள்ளவிருந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

நாமக்கல் திருமண மண்டப அடிக்கல் நாட்டு விழா

நாமக்கல் ஊராட்சிமன்றத் திருமண மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டு விழா, 8—5—68 மாலை 5-மணிக்கு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி தலைமையில் நடைபெறும்.

பொதுப் பணித் துறையமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் அடிக்கல் நாட்டுவார்.

வழக்கறிஞர் நல்லுசாமி அமெரிக்கப் பயணம்

டெல்லி விமான நிலையத்தில் சிறப்பான வழியனுப்பு

புதுடில்லி, மே 4—

வழக்கறிஞர் நல்லுசாமி அவர்கள் 4—5—68 காலை 8-30 மணிக்கு டெல்லி பாலம் விமான நிலையத்திலிருந்து அமெரிக்கா பயணமானார்.

விமான நிலையத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் க. இராசாராம், மு. தெய்வீகன், கா. சுப்ரவேலு, திருச்சி வழக்கறிஞர்கள் என்.சுப்பையா, பெரியண்ணசாமி, இராசகுமார், நடராசன், மற்றும் வழக்கறிஞர்களும், நூற்றுக்கும் மேற்பட்ட கழகத் தோழர்களும், நண்பர்களும் மாலை யணிவித்து வழியனுப்பினர்.

திரு. நல்லுசாமி ஜெனீவா, பாரிஸ் வழியாக இலண்டன் சென்று அங்கு ஒருநாள் தங்கி, மறுநாள் வாஷிங்டன் நகருக்குப் புறப்பட்டுச் செல்கிறார்.

அமெரிக்க மக்களின் விவசாயத் துறை, சமுதாயத்துறை, கலாச்சாரம், பண்பாடு, நரிகரிகம் முதலியவைகளை அறிந்துவர அமெரிக்காவின் அழைப்பின் பேரில் சென்று 6 மாதம் அமெரிக்காவில் தங்குகிறார்.

குழுக் கூட்டம்

சென்னை வண்ணைப் பகுதி தி. மு. க. உறுப்பினர் கூட்டம் 8—5—68 இரவு 8-மணிக்கு இராயபுரம் 'அறிவக'த்தில் நடைபெறும்; உறுப்பினர்கள் தவறாது வருகை தருமாறு பகுதிச் செயலாளர் பி. கே. மாரியப்பன் கேட்டுக் கொள்கிறார்.

சிக்கன நடவடிக்கையின்

இலட்சணம்

கழக உறுப்பினர் கண்டனம்

இரயில்வே நிர்வாகச் செலவைச் சிக்கனப்படுத்துவது பற்றி விவாதிக்கப்பட்டபோது திரு. அரூர் முத்து (தி. மு. க.) கில ஒழுங்கீனங்களை எடுத்துக் காண்பித்தார்; அவர் கூறியதாவது:—

"சேலம் மாவட்டத்தில் எனது தொகுதியில் உள்ள செங்கல், சுண்ணாம்புச் சூளைகளில் இரயில் கரிகள் பயன்படுத்தப்படுகின்றன. எஞ்சின் டிரைவர்களும் பயர்மென்களும் எஞ்சினிலிருந்து சாம்பலைத் தள்ளுவது போல, எரிந்து கொண்டிருக்கும் கரியைக் கீழே தள்ளிவிடுகின்றனர்; இந்தக் கரிகளைக் காண்டிராக்டர்கள் சேகரித்து வருகின்றனர்.

கொள்கைப் பிரசார நாடகம்

என். எஸ். கே. பேரவையினர் நடத்தும் 'அண்ணாவின் குமரிக் கோட்டம்' என்ற கொள்கைப் பிரசார நாடகம் நடத்த விரும்புவோர் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்க:—

ஆர். ஜி. தாமோதரன்,
41, தெற்கு உஸ்மான் ரோடு,
சென்னை—17.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.